# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 58/2022 தேதி- 08.10.2025

(P.W.1) - ரமணி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதிர் கோரிக்கையில் பிரதிவாதி குறிப்பிட்டிருக்கும் சொத்து அவருடைய சொத்து என்றால் சரிதான். எதிர்கோரிக்கையில் கூறியுள்ள வழக்கு சி பட்டிகை சொத்தில் பாதை உரிமை கேட்டுள்ளார் என்றால் சி பட்டிகை சொத்துவரை மட்டும்தான் வழிப்பாதை உள்ளது. அதற்கு பின்பு வழிப்பாதை எதுவும் இல்லை அது எங்களுக்கு மட்டும்தான் சொந்தமானது. வா.சா.ஆ- 12 உயர்நீதிமன்றம் பிறப்பித்த ஆணையிலும் வா.சா.ஆ- 10 ஆர்டிஓ பிறப்பித்த ஆணையிலும் வழக்கு சி பட்டிகை சொத்து பிரதிவாதிக்குரிய வழிப்பாதை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த உத்தரவு தவறானது அதை ரத்து செய்ய வேண்டும்.

ஆர்டிஓ விசாரணையில் நான் ஆஜராகி வாக்குமூலம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். ஆர்டிஓ விசாரணையின் போது அவருக்கு மேற்படி ஆணை பிறப்பிக்க அதிகாரவரம்பு இல்லை என்று ஆட்சேபணை ஏதாவது தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை. உயர்நீதிமன்றத்தில் எனது கணவர் மனு தாக்கல் செய்தபோது ஆர்டிஓவிற்கு ஆணை பிறப்பிக்க அதிகாரவரம்பு இல்லை என்பதை எனது கணவர் தெரிவித்தாரா என்றால் கேட்டுள்ளார்.

உயர்நீதிமன்றமே பிரதிவாதிக்கு வழிப்பாதை உரிமை இருப்பதாக ஆர்டிஓ போட்ட உத்தரவு சட்டப்படியானது என முடிவு செய்யப்பட்டுள்ளது என்றால் கூறப்பட்டுள்ளது ஆனால் அது தவறானது. உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறதா என்றால் செய்யப்படவில்லை. பிரதிவாதிக்கு

மின்சார இணைப்பு சி பட்டிகை சொத்துவழியாக செல்வதை நான் ஆட்சேபணை செய்யவில்லை என்றால் சி பட்டிகை வழியாக மின்இணைப்பு செல்லவில்லை.

நீதிமன்ற ஆணையரின் புகைப்படத்தில் பிரதிவாதியின் வீட்டிற்கு சி பட்டிகை சொத்து வழியாக மின்இணைப்பு செல்வதை காண்பித்திருக்கிறார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. பிரதிவாதி சி பட்டிகை சொத்து வழியாக வசதியுரிமை மட்டும்தான் கேட்டுள்ளார் உரிமை கேட்கவில்லை என்றால் அவருக்கு அதில் வசதி உரிமையில்லை. பிரதிவாதி அவருடைய எதிர்கோரிக்கையில் கூறியுள்ளதுபடி 1988 ல் அவரது தாயாருக்கு உரிமை கிடைத்து முதலும் அதன்பின்னர் 2018 ல் பிரதிக்கு எதிர்கோரிக்கையின் சொத்தில் உரிமை கிடைத்ததன்படிதான் எதிர்கோரிக்கை பரிகாரத்தை அவர் கேட்டுள்ளார் என்றால் சரியல்ல.

பிரதிவாதி எதிர்கோரிக்கை கோரியுள்ள சொத்தில்தான் பிறந்து வளர்ந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 42 வருடத்திற்கு மேலாக சி பட்டிகை சொத்தை பாதையாக அவரும் அவரது குடும்பத்தாரும் உபயோகப்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் அதை தடை செய்யவேண்டும் என்று கேட் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதியோ அவரது குடும்பத்தாரும் சி பட்டிகை சொத்தை வழிப்பாதையாக உபயோகிப்பதை தடை செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் கூறியுள்ளதுபோல் பிரதிவாதிக்கு பஞ்சாயத்து பாதை இருப்பதாக வா.சா.ஆ. 12 மற்றும் வா.சா.ஆ. 10 ல் எந்த ஆணையும் இல்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் சி பட்டிகை சொத்து வழியாக நடந்து செல்வதை தடுப்பதால் எனக்கு எந்த பலனும் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால்

பிரதிவாதிக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் இடையில் யாராவது சமரசம் பேசினார்களா என்றால் பேசவில்லை. நீதிமன்றம் மூலமாக சமரசம் பேச நான் விருப்பப்படவில்லை இடமும் இல்லை.

பிரதிவாதிக்கு பள்ளிக்கு செல்லக்கூடிய இரண்டு குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதி பலமுறை என்னிடம் சமரசம் பேசினார் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.